| | |
|---|---|
| **மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**<br>**கிருஷ்ணகிரி** | **மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,**<br>**கிருஷ்ணகிரி**<br>**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,**<br>**24/43, 4–வது குறுக்குத் தெரு, மேற்கு இணைப்பு சாலை,**<br>**கூட்டுறவு காலனி, கிருஷ்ணகிரி – 635 001.** |

**நாள். 30.08.2019**

## திருத்த அறிவிப்பு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களில் (கூட்டுறவு நகர வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்) காலியாக உள்ள 50 உதவியாளர் / எழுத்தர் பதவிகளுக்குரிய நேரடி நியமனத்திற்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படவுள்ள எழுத்துத் தேர்விற்கு இணையவழி விண்ணப்பிக்க **19.08.2019** அன்று அறிவிப்பு **(விளம்பர எண்–01/2019)** வெளியிடப்பட்டு www.drbkrishnagiri.net என்ற இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றது. இணைய வழி விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தெரிவிக்கப்பட்ட **கடைசி நாள் 20.09.2019 லிருந்து மாற்றம் செய்யப்பட்டு 30.09.2019 வரை விண்ணப்பிக்கலாம்** என அறிவிக்கப்படுகிறது.

மேற்படி அறிவிப்பில் கல்வி தகுதி குறித்த பத்தி 2(ஆ)ல் **"கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே"** என்பதற்கு பதிலாக **"கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் மற்றும் 2019–20ஆம் ஆண்டில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களின் வழி தொலைதூர கல்வி வழியாகவோ அல்லது நேரடியாகவோ கூட்டுறவு பட்டய பயிற்சி பயின்று வரும் மாணவர்கள்"** என திருத்தம் அறிவிக்கப்படுகிறது.

இத்தேர்விற்கான குறைந்த பட்ச கல்வித்தகுதி, வயது வரம்பு, இட ஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி, தேர்வுக்கான பாடத்திட்டம், தேர்வுக் கட்டணம் மற்றும் பிற விவரங்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளத்தில் (www.drbkrishnagiri.net) வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தைக் காணலாம்.

**இணைப்பதிவாளர்/ தலைவர்,**
**மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**
**கிருஷ்ணகிரி.**